மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | OS 131/2022 |
| பெயர் | : | பொன்னுசாமி (PW) |
| த/பெ. | : | சுடலைமாடன் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of July 2022

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சொத்தினை அனுபவிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அனுமதிகோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கினை தவமணி மற்றும் அவரது மகன் மீது தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தினை தற்போது யார் அனுபவத்து வருகிறார் என்றால் நான்தான்.

2) 25.01.1985 கிரையம் பெற்றுள்ளதாக சொல்லியுள்ளதில் யாரிடம் இருந்து கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் ஜோசப்நாடார்மனைவி ரஞ்சிதம்மாள், அவரது மகன் அகஸ்டின் சாமுவேல் , நவமணி நாடார், ஜான்செல்லையா மனைவி பாப்பா ஜான் செல்லையா மகன் ஜேக்கப் சாமுவேல் ஆகியோரிடம் இருந்து என் அப்பா கிரையம் பெற்றுள்ளார்.

3) அந்த ஆவணப்படி 3 ஏக்கர் 93 செண்ட் ஆகும். அது எந்த புல எண்கள் என்றால் 263/3 ல் 3 ஏக்கர் 34 செண்ட், 263/8 ல் 59 செண்ட் அதில் என் தகப்பனார் 2 ஏக்கர் 94 செண்ட் கிரையம் பெற்றுள்ளார். அது புஞ்சை நிலமாகும். அதில் கட்டிடம் கட்டி அனுபவவித்து வருகிறேனா என்றால் அது மானாவாரி நிலமாக உள்ளது.அதில் உழுந்து , பாசிபயரு பயிரிட்டுள்ளோம்.

4) மேற்படி விஷயத்தை நான் பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் பயிரிட்டுள்ளோம் என்று சொல்லியுள்ளேன் , என்ன பயிரிட்டுள்ளோம் என்று குறிப்பிடவில்லை. எந்தவிதமாக பயிரிட்டுள்ளோம் என்றும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

5) நான்  ராணுவத்தில் ஒரு பி ரிவில் இருந்து ஓய்வு பெற்றுள்ளேன். வருடத்திற்கு ஒருமுறை ஊருக்கு வந்து செல்வேன். 06.11.2019 ல் என் அம்மாவிடம் இருந்து நான் தான செட்டில்மெண்ட் பெற்ற ஆவணம்  1985 வருட ஆவணத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட ஆவணம்.

6) 2019 ம் வருட தான செட்டில்மெண்ட்ஆவணத்தில் புல எண்.263/3 எ ல் 1 ஏக்கர் 96 செண்ட், புல எண். 263/3 சி ல் 39 செண்ட்,புல எண். 263/8 ல் 59 செண்டையும் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி விபரத்தை பிராதில் சொல்லியுள்ளேன். அவ்வாறு பிராதில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

7) 27.09.2021 ல் என்னுடைய அனுபவத்தை இடைஞ்சல் செய்வதாக ஓட்டப்பிடாரம காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன். புகாரின் அடிப்படையில் நிலத்தை அளந்து பார்க்குமாறு சொன்னார்கள். நான் சர்வேயருக்கு பணம்கட்டி அளக்க சென்றபோது பிரதிவாதிகள் தரப்பில் தகராறு செய்தார்கள்.

8) நான் அனுபவம் செய்துகொண்டு வருவதில் பிரதிவாதிகள் இடைஞ்சலாக இருந்தார்கள் என்றும் அளக்கவிடாமல் தகராறு செய்தார்கள் என்றும் எவ்வாறு கூறிகிறேன் என்றால் உழவு போடும் போது தகராறு செய்தார்கள். அந்த இடம் வழக்கு தாக்கல் செய்தததில் இருந்து தரிசாகதான் கிடக்கிறது என்றால் வழக்கு தாக்கல் செய்த பின்னர் காவல் நிலையத்தில் யாரும் அனுபவிக்கக்கூடாது என்று சொன்னதால் அப்படியே கிடக்கிறது.

9) வழக்கு தாக்கல் செய்தபின்னர் தாவா சொத்தை யாரும் அனுபவம் செய்யவில்லை. OS 154/ 1985 என்ற வழக்கினை 1 ம் பி ரதிவாதி தாக்கல் செய்திருந்த விபரம் நான்  விடுமுறையில் வரும்போது என் தகப்பனார் சொல்லி எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா. ஆ 3 ல் 1 ம் பிரதிவாதிக்கு இடம் சொந்தமில்லை என்று எங்கும் குறிப்பிடவில்லை என்றால் வழக்கு தள்ளுபடி ஆனதாக சொல்லப்பட்டுள்ளது. 1 ம் பிரதிவாதி வருகையின்மையால் தான் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் வா.சா. ஆ 3 ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

10) 1வது பிரதிவாதி அவரது வகையராட்களோ என்னை இடையூறு செய்யவில்லை ஏன்னென்றால் அது அவர்களது சொத்து என்றால் சரியல்ல. 1வது பிரதிவாதிக்கு தபசில் சொத்து ஓட்டப்பிடராம் சார்பதிவாளர் ஆவண எண். 80/1985ன் படி 1 ஏக்கர் 96 செண்ட் 22.01.1985ம் ஆண்டு கமலாம்பாள் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் கிரையம் பெற்றார்கள் ஆனால் அனுபவவிப்பதற்கு முன்பாகவே தகராறு ஏற்பட்டு 4 பங்கில் 3 பங்கினை என் தகப்பனார் வாங்கியுள்ளார் , ஒரு பங்கினை 1ம் பிரதிவாதி பெற்றுள்ளதாக சொல்லி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

11) 1ம் பிரதிவாதிக்கு குலசேகர நல்லூர் கிராமம் பட்ட எண். 1089 கொடுக்கப்பட்டுள்ளது என்றால் தனி பட்டா அவருக்கு கொடுக்கவில்லை. மேற்படி விஷயம் பொய் என்றாலும் 1 ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டு கணிணி பட்டா உள்ளது , பட்டா பாஸ்புக்கும் உள்ளது என்றால் 1ம் பிரதிவாதி தனிபட்டா கிடையாது புல எண். 263/3பி ல் 98 செண்ட்டிற்கு ஆசிர்வாதம் நாடாருக்கும் 1ம் பிரதிவாதிக்கும் கூட்டு பட்டா உள்ளது.

12) அந்த இடத்தில் விவசாயம் செய்து பிரதிவாதிகள் 2013ம் ஆண்டு முதல் வறட்சி நிவாரணம் பெற்றுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி 22.01.1985 ம் ஆண்டு கிரையம் பெற்ற பின்பு 3 நாட்கள் கழித்து 25.01.1985 ஆவண எண். 93/1985ன் படி 1ம் பிரதிவாதி ஏற்கனவே கிரையம் வாங்கிய சொத்தினை நாங்கள் கிரையம் பெற்றோம் என்றால் சரிதான், ஆசிர்வாதம் நாடார் மனைவி கமலாம்பாவிடம் இருந்து 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார், அவரது 3 பங்காளிகளிடம் இருந்து நாங்கள் கிரையம் பெற்றுள்ளோம்.

13) 25.01.1985ல் 1 ம் பி ரதிவாதி 1 ஏக்கர் 96 செண்ட் கிரையம்பெற்ற பின்னர் என் தகப்பனார் மீதம் இருக்கும் 1 ஏக்கர் 97 செண்ட்டில் 2 ஏக்கர் 94 செண்ட் மோசடியாக கிரையம் பெற்றுள்ளார் என்றால் என் அப்பா கிரையம் பெற்றது பற்றி தெரியாது. ஆனால் என் அப்பா மற்ற பங்காளிடம் இருந்து பெற்றதாக தெரிவித்தார். பிரதிவாதியிடம் இருந்து நிலத்தை அபகரிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் கிரையம் பெற்றுள்ளளோம் என்றால் சரியல்ல. கிரைய விபரங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

14) தூத்துக்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS.154/1985 வழக்கு தாக்கல் செய்த பின்னர் ஊர் பெரியவர்கள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, அவ்வாறு நடந்திருந்தால் என் அப்பா சொல்லியிருப்பார். பேச்சுவார்த்தை நடந்தது என்றாலும் அவரவர் சொத்தினை அவரவர் அனுபவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு பேச்சுவார்த்தையில் முடிய ஏற்பட்டதால்தான் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில் 1ம் பிரதிவாதி ஆஜராகவில்லை என்றால் சரியல்ல, பேச்சுவார்த்தை நடந்திருந்தால் என் அப்பா சொல்லியிருப்பார். என் அப்பா 2002ம் ஆண்டு இறந்துவிட்டார்.

15) பத்திரம் ஏற்பட்ட பின்னர் என் உயிருடன் இருந்த காலம் வரை எந்த பிரச்சனை இல்லை என்றால் 2021 வரைக்கும் எந்த பிரச்சனையும் கிடையாது.பிரதிவாதிகள் இடத்தை கிரையம் பெற்றதன் அடிப்படையில் அனுவித்து வருகிறார்கள் என்றால் இல்லை. 2 ஏக்கர் 94 செண்டை நாங்கள் அனுபவித்து வருகிறோம். பிரதிவாதிகள் புல எண். 263/3 பி ல் உள்ள 98 செண்டை மட்டும் அனுபவித்து வருகிறார்கள்.

16) பிரதிவாதிகள் ஏற்கனவே கிரையம் பெற்றதை அபகரிக்க வேண்டும் என்று கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை, என்னுடைய இடத்தை அனுபவிப்பதற்காக தாக்கல் செய்துள்ளேன்.
(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வேறொரு நாளுக்கு ஒத்திவைக்கப்படுகிறது )

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.